உ

கடவுள் துணை.

# விநோதவிடிகதை.



ஆசிரியர்.

இரத்தினவேலுமுதலியாரது

வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898

உ

கடவுள்துணை.

# விநோதவிடிகதை.

வருங்காலம் நிகழ்ந்துரைப்பான் சாஸ்திரியல்ல வாக்கியுண்ணவழிகாப்பான் முடவனல்ல, கரும்புமுதல் மலர்முடிப்பான் சுதனுமல்ல, தூளில் பசும்புல்சுமப்பான்தோட்டியல்ல, பருமருடல்சீரணிவான் பாமனல்ல பலவில்லந்தான்புசிக்கும் பரதேசியல்ல, சிறந்தவனக்கிளிபோன்ற மொழியினளே சிறுனவிக்கதையை செப்புவாயே. (விநாயகர்)

கூத்திதனக்கேயலேவான் குடியனல்ல குலமில்லாக் குலம்புகுந்தான் பிடியனல்ல, வாத்தினையேபடித்தான் வம்பனல்ல மயில்கோழிமிகவளர்த்தான் மறவனல்ல, தேற்றுந்தேன்தினையுண்டான் வேடனல்ல திகழ்வேடந்தான்தரித்தான் சித்தனல்ல; பூத்தமலர்க்கணையுடையான்தேவியாளே பெண்மயிலே இக்கதையை புகலுவாயே. (சுப்ரமண்யர்)

காணுவதிற் கண்ணிற்படான் அலைந்துபோகான் கணபூதமனிதரிடஞ் சஞ்சரிப்பான், பூணுகின்ற வஸ்திரமுந் தனைப்பறிப்பான் புவியெங்கும் போர்புரிந்துக் கோஷ்டங்கொள்வான், கோணமடைமேருவையும் வேர்பறிப்பான், கொடிபலத்த தருக்களையு மொடியச்செய்வான், வேணபேர்க்கானந்தம் விளையச்செய்வான் விபரமாயிக்கதையை விளம்புவாயே. (காற்று)

ஈரிரண்டுகம்பமுண்டு மண்டபமுமல்ல இலைபரித்து குலைவளர்க்கும் வாழையுமல்ல, கோரகொம்பத்தனையேந்தும் வேடனல்ல கூசாமலேபுடைக்கு முறமுமல்ல, தாரைகுழை மிகவிருக்குஞ்ஜலதாரியல்ல தட்டிசுறந்தாளவிளக்குத் தூடப்பமல்ல, கூறுகின்றவிக்கதையின் பொருளைச்சொன்னால் குருவென்றே ஆயிரம்பொன்கொடுக்கலாமே. (யானை)

கட்டியடித்தேயசுர்றுஞ்சுருணையல்ல காண்மாரிப்பாயவிடும் வாய்க்காலல்ல, வெட்டிமரித்துத்திரும்பும் மடையுமல்ல விலங்கினத்தின்தோல்சுமக்கும் பொதியுமல்ல, பட்டமுடிதான்தரிக்கும் வேந்தனல்ல பலநாளுமிருமையுங்குறும்பசிதீராது திட்டனமன்போர்ஜெயிக்கும் வடிவினளே சுந்தரியேயிக்கதையை செப்புவாயே. (குதிரை)

கொண்டையிட்டுதான்மினுக்கும் பெண்டுமல்ல குலவுமணிசமுத்திவிடும் பூஷணமுமல்ல, துண்டுவாகொப்புமுண்டு மரமுமல்ல துவளாமலா பிள்ளுமுண்டு புவனமல்ல, செண்டிப்பூகொளம்புமுண்டு நதியுமல்ல செலங்கைகொப்பி தார்தரிக்குஞ் சித்தரல்ல, வண்டுநிகர்விழியாளே மானேதேனே உளமாரவிக்கதையை வருத்துவாயே. (மாடு)

கிட்டநின்றால் எட்டிவிடும் பரவையல்ல சேவலமா யொடுங்கிநிற்கும் பஞ்சையல்ல, கட்டுதுணிசவளிகொள்ளுஞ் செட்டியல்ல கனத்தமுத்து கல்லெடுக்குங்கவணையல்ல, குட்டியிட்டிச்சுவரிலொண்டுந் தேளுமல்லகுலத்திலேயிகழ்ச்சியென்பார் புலையனல்ல, வட்டமதிபோலிருக்கும் முகத்தினாளே வஞ்சியரோகொஞ்சமிதுவருந்துவாயே. (கழுதை)

குலைகுலைக்கும் அழுகலுண்டுதேங்குமல்ல குலத்திலிசைந்தொழுகாது வேசியல்ல, வலியசண்டைக்கேபுகரும்வண்டனல்ல, மனைபுகுந்துஅடிபயக்குந்திருடனல்ல, அலைந்துமிகத்தானுழலும்பித்தனல்ல, அதட்டிநின்றால் கால்தூக்கிக்காட்டிச்செல்லும், கலைபோன்றமிரண்டவிழி யாரணங்கே கண்மணியேயிக்கதையின் கருத்தைச்சொல்லே. (நாய்)

பள்ளம்வெட்டிக்குழிபறிக்கும் ஒட்டனல்ல பருத்தநறுங் கிழங்கெடுக்கும் வில்லியல்ல, பிள்ளைகளை மிகப்பெருதம் பிரமனல்ல பேதையிடஞ்சஞ்சரிக்குந் தரித்திரமல்ல, உள்ளதெல்லாம் வாங்கியுண்ணுந் தொழும்பனல்ல ஊரைசுத்திப்படுத்துழுவானுறங்கமாட்டான், சொல்லுகின்ற இக்கதையின் பொருளைச்சொன்னால் சுற்றமென்றே உன்வாக்கைகுழலாமே. (பன்றி)

பார்த்துமுகம் பல்காட்டுங் கண்ணாடியல்ல பசகளிடஞ்சேட்டைசெய்யும்வேசியல்ல, கூத்தாடிபணம்பரிக்குந் தாசியல்ல குந்திசத்துமிருக்காது நாயுமல்ல, போற்றுகின்றகொடியாகும் புனலுமல்ல போர்புரிந்துஜயமடையும் விஜயனல்ல, சாற்றுகின்றவிக்கதையின் பயனைச்சொன்னால் சரணமென்றே அவரடியை சாரலாமே. (குரங்கு)

படுக்கைக்கேயணைதேடுங் கத்தியல்ல பாலுக்குப்பாத்திரந்தேடும் பசுவுமல்ல, துடுக்குக்கேயிருள்தேடுங் கூத்தியல்ல சொல்லுக்கேபதுங்கிநிக்குந் தோகையல்ல, இடுக்குக்கேதானோடுந் தேளுமல்ல இரைச்சிக்கேவழிபார்க்கும் நாயுமல்ல, படித்துவிட்ட இக்கதைக்குப்பயனைச்சொன்னால் பரமனென்றே அவரடியைப் பணியலாமே. (பூனை)

நீலக்கண்ணாடிசொள்ளுங் கவணையல்ல நேத்தியுடன் தான்விரிக்குங் கடையுமல்ல, கால்தூக்கிநடனமிடுங்காளியல்ல காலில்கொண்டே பாம்பாட்டுஞ்ஜோகியல்ல, மேல்நிறைந்தபொட்டுமுண்டு வானமல்ல மேன்மைமிகக்கொண்டாடும் வேந்தனல்ல, பாலுக்குநிகருனமொழியினளே பத்தினியேயிக்கதையைபகருவாயே. (மயில்)

பச்சைநிறமேனியுண்டு விஜயனல்ல பவழயிதழ்வாயுமுண்டு கோவையல்ல, உச்சுதலைபேடியுண்டுமைநாவல்ல உட்கழுத்தில்நீலமுண்டுநக்கனல்ல, இச்சையுடன்சிறையிலிடுந்திருடனல்ல இனியமொழிதான்புகலும் மனிதனல்ல, கச்சைதனக்கேயடங்கா ஸ்தனத்தினளே காதலியே யிக்கதையைக் கழறுவாயே. (கிளிப்பிள்ளை)

கருகருத்தநிறமுடலுங் காலனல்ல கண்கவர்ந்தே பார்வைகொள்ளுங்க போதியல்ல திரிச்சலெண்ணைக் குடிபுகரும் மடந்தையல்ல சிறுவரிடம்பரி

த்துண்ணூர் திருடனல்ல, பரிப்பரிசைக் கண்டலைவான் பார்ப்பானல்லபார்த்திருக்கக் கொள்ளைகொள்ளுங் கேப்பனல்ல, திருநிலத்தின்மிகருளே தெய்வமானே தேவியரே யிக்கதையை தெளியச்சொல்லே. (காகம்)

மண்ணலைந்து மேல்துளைக்குங் குயவனல்ல மதித்துவயல் போல்காக்கும் மனிதனல்ல, கண்ணிரண்டுஞ்சுழிந்துநிற்கும் குருடனல்ல கற்கோட்டையுள்ளிருக்கும்வேந்தனல்ல எண்ணமுடன் பசைஞர்பசிநோயைத்தீர்ப்பான் ஈரைந்துகரமுடையோன் பரமனல்ல, பெண்ணணங்கேயிக்கதையின் பயனைச்சொல்லி பக்குவமாய் ஆயிரம்பொன் பறித்திடாயே. (நண்டு)

மரத்திலொட்டியேவசிக்கும் வௌவாலல்ல மரவுரியைத்தரித்திருக்கும்யோகியல்ல, சிரசில்கங்கைச்சடையுமுண்டு குளமுமல்ல உருவுகொண்டேபருத்திருக்குங் கட்டியல்ல உச்சியிலே குடுமியுண்டு செட்டியல்ல கரத்தின்வழி கலகலென நடையினுளே கற்பகமே அற்புதத்தை கண்டிடாயே. (தேன்கூண்டு)

கொத்துக்கேவழிபார்ப்பான் பசியாளியல்ல குளிர்நீருக்கேயிசைவான் தபசியல்ல, புத்திரனால் தானிறப்பானிரணியனல்ல போற்றுமவர்க்கரசளிப்பான் குபேரனல்ல, ரத்தினவர்க்கே நான்குவிதமாயாவன் நந்தன்முன்பாய்ப் பேற்றியளைப்பெற்றெடுப்பான் சித்தத்தில்யிக்கதையின் பயனைக்கண்டு சேயிழையேசபைநடுவேசொல்லுவாயே. (வாழமரம்)

காதல்கொண்டேசரந்தொடுக்கும் மதனுமல்ல காயமெங்குங்கணுத்திருக்கும் பாண்டுமல்ல வேதனையாய்சேர்ந்தணையும் புருடரல்ல விலைகாட்டிபணம்பறிக்கும் விலங்குமல்ல மாதர்கள்மேல் வீற்றிருக்கும் பணியுமல்ல மணஞ்செய்தேவாழும் மணவாளனல்ல போதமதைக் கற்றுணர்ந்த பெரியோர்முன்னே பேசினேன் இதன்பொருளை புகல்வீரையா. (மல்லிகைப்பூ)

சோலைகண்டே யுள்ளிருக்கும் மந்தியல்ல துடிசிகப்புமஞ்சளிடுந் தோகையல்ல ஆலைவைத்தேயரைக்கவருந்தனவானல்ல அருட்சுவை தந்தேயளிக்குந்தேனுமல்ல கோலுகொண்டுச் சார்புழியுங்கள்ளுமல்ல கொப்பறையிற்கொண்டுவிடும் என்ணெயல்ல வாலையெனப்பருவமுளமானேதேனே வண்மையாய் இக்கதையை வழுத்திடாயே. (கருப்பு)

ஒற்றைக்கொம்பிலேறிநிற்கும் பட்சியல்ல உட்கழுத்திலருப்புமிடும் புட்பமல்ல, கொத்துவடமணிதரிக்கும் முத்துமல்ல கொட்டிசுடப்பல்விளிக்குங்குரங்குமல்ல வெற்றிசண்டைதானறியும்மல்லனல்ல விரைந்துகளம்புகுந்துழலுங் கத்தியல்ல கொத்துமணித்தாவடங்கள் பூண்டமாதே கோதையரோ இக்கதையைக்கூறுவாயே. (சோளம்)

கட்டிகளம்போர்புரியும் வீரனல்ல காணியெங்குஞ் சுற்றிவருங்கடப்பனல்ல, இட்டமுடன்மனையகலும் புருடனல்ல இருப்பவர்மேற்றூசந்தொடுக்கும்பித்தனல்ல, சட்டமுடன் குந்துகேசனைக்கமாட்டான்சகலருக்கும்வயத்

தெரிச்சல்தன்னிக்கார்ப்பான் அட்டதிக்குச்சுத்திவரும் மதிக்கொப்பானதூரணங்கேயிக்கதையை யறிந்திடாயே. (நெல்லு)

மஞ்சள்தனைமெய்யணியும் மடந்தையல்லமணம்புணர்ந்தே மயக்கமிடுந்தாசியல்ல, கொஞ்சிபலரேந்துங் குழந்தையல்ல கொற்றவர்களிடம்புகருந்திருவுமல்ல, பிஞ்சகன்மேல்நின்றாடும் பாம்புமல்ல பிரியமுடன்தனைபருந்தும் மதுவுமல்ல, கொஞ்சுகிளி மொழியணங்கேபருவமானே குணமானயிக்கதையை கூறுவாயே. (எலுமிச்சம்பழம்)

வழுத்துவேன்குடலுமுண்டு ஜீவிப்பதல்ல வரிப்பிரப்பு முதுகிலுண்டு பிரம்புமல்ல பழுத்தசிரமேனியுண்டு கிழவனல்ல பலவிடத்தில்தான்படுக்கும்பித்தனல்ல குழித்தபெரு வயருமுண்டுபேழையல்ல கொடியிட்டே தான் வசிக்கும் வேந்தனல்ல செழித்தமலர்முகத்தாளே மானேதேனே செண்பகமேயிக்கதையை செப்புவாயே. (பூசனிக்காய்)

தலைபெருத்துத்தடிமுழங்குமகப்பையல்ல தன்வாயால்மரக்கொத்தும் பறவையல்ல, வலியபுயந்தட்டியெழும்மல்லரல்ல வாழ்குலத்தையேயழித்தான்சகுனியல்ல, குலைசளவுக்கேயிசைவான் குரூரனல்ல ஆலயத்தில் நம்மாலே குலஞ்ஞானர், சிலையனையவடிவாளேரூபவல்லி சீரானயிக்கதையைச்செப்புவாயே. (கோடாலி)

காட்டிவிற்குங்குண்டுண்டுகோவியல்ல களியுண்டுவெட்டுண்டு வங்கமல்ல; வாட்டியிட்டச்சுருளுண்டு வோலையல்லவழுத்துசளிமண்ணுமுண்டு பூமியல்ல, பாட்டிசைக்குஞ்சபைக்குவரும் பரத்தையல்ல பலரிடமுமுன்னிருந்து பகரச்செய்யும், நாட்டிலுனக்கீடில்லா நயனமானே நாயகமேயிக்கதையை நாட்டுவாயே. (கொட்டைப்பாக்கு)

கண்டித்தேசுழிபுகுவான் குழியுங்கொள்வான் கசக்கிசலம்பிழிந்திடுவான்வண்ணானல்ல, அண்டிநின்றுத்தானுழல்வார்தாசனல்ல அகன்றிடுவார்புறமுழல்வார் விலைமாதரல்ல, கொண்டுசுட மேந்திநிற்பார்சோகியல்ல கூச்சவிட்டேவருபுகையின்வண்டியல்ல, தண்டைசிலம்போசையிடும் பாதத்தாளே தந்திரமாயிக்கதையை சாற்றுவாயே (செக்கு)

காலுமிரண்டுண்டெழுந்துநடக்கமாட்டாள் கண்ணிரண்டும்மேல்சிமிட்டிவிழிக்கமாட்டாள், கோலுண்டுதானறப்பாள்கத்தியல்லகூன்வளர்ந்தமுதுகுண்டு நிமிரமாட்டாள், பாலுகந்துகுடித்தறியாள் பாக்குத்தின்பாள் பகருமனல்மூட்டியுலைவடித்தேவாழ்வாள் மேலினியவாசமதுவீசுமானே மெல்லியரோகதைவிபரம் விடிவிப்பாயே. (பாக்குவெட்டி)

உடல்நீண்டபாதமுண்டு கிண்ணமல்ல உச்சிதமெய்க்கண்களுமுண்டிந்திரனல்ல முடியில்பலசுங்குண்டு குல்லாவல்ல மூழையைப்போல்துவாரமுண்டு புருசுமல்ல, இடைநிறைந்தசபைபாடும் புலவரல்ல இச்சையுடன்படி

நடக்குந்தாசியல்ல குடத்தைநிகர்முகமாதே கோமளாங்கி கூசாமல்கதைதவி பாங்கூறுவாயே, (நாகசுரம்)

வாய்தனிலே நெருப்பெரியும் பேயுமல்ல வாய்மையுண்டுவயர்வளர்க்கும்பாம்புமல்ல, தேய்வுடன்வாயுவைக்கூட்டுந்தேவனல்ல செங்கையால்மூடித்திறக்குஞ் சிமிழுமல்ல, பாய்படுத்துக்கால்கிளம்பும்பாரத்தையல்ல படியிலுள்ள கொல்லரில்வாழ் மங்கையல்ல, சேய்போன்ற குதலைமொழியாரணங்கே சித்திரயேயிக்கதையை செப்புவாயே. (துருத்தி)

மோதிரமும்வளைபூணும்மாதுமல்ல முழுகதலைக்கெண்ணெயிடும் வணிகனல்ல கோதிபின்னல்சடைவிடுக்குங் கூந்தலல்ல குச்சுதொங்கல்சுங்குறுங்கூத்தாடியல்ல, "சோதிமெய்யில்' நூலணியும் மறையோனல்ல தொடுத்திடங்கால்பிடித்தோடுஞ் சுணங்கனல்ல, சீதமலர்போன்றயிரு அடியினளே செண்பகமேயிக்கதையை செப்புவாயே. (செருப்பு)

பஞ்சிதனைப்புசித்து அகப்பாதுகார்க்கும் பலநாளும் போர்வையிட்டுப் படுத்துறங்குந் தஞ்சமெனவிழுந்தவர்கடலையைத் தூக்கும்தாழ்வில்லாதுஞ் சல்மெத்தைதனிலேநாடும் வஞ்சமுடன்மேல்விழுந்து மருவிப்பார்க்கும் வசியமுறு தாற்வேசியல்லத்தேறும் தஞ்சமெனயோகிமுதல் வணங்கச்செய்யும் தார்குழலேயிக்கதையைசாற்றுவாயே. (தலைக்காணி)

அக்கினியில்நின்றுவிளையாடிப்பார்ப்பான் அம்புவியில்யாவருக்கு மச்சமீவான், பக்குவமாய்க்கொலைசெய்து மருவிவாழ்வான் பாரில்விசைவில்லுடனே பதிக்திருழ்வான் தக்கபடிவனம்புகுந்து வேட்டைசெய்வான் தனிவழிக்குத்துணையாகிக் காவலாவான் முக்கனியும்சர்க்கரையும் பாலோடொத்த மொழியணங்கேயிக்கதையை மொழிகுவாயே. (துப்பாக்கி)

கிள்ளுவதும்பார்ப்பதுவுந்தேய்ப்பதுண்டு கீர்த்தியுடன் தாஞெடிக்கிக்குலுக்கலுண்டு, அள்ளியெண்ணைநீருடன்சேர்த் தாட்டலுண்டு அனைவர்பின்னேசித்துக்கையேர்ப்பதுண்டு கள்ளருந்துங் காளையைப்போற் றிரிவதுண்டு கருதிமரியாதைகெட்டுக் கடப்பதுண்டு புள்ளிமயில்போன்ற நடையுடைய மானே பொற்கொடியேயிக்கதையைப் புகலுவாயே. (பொடி)

விரித்துக்கீழ்போட்டசனிற்படுப்பதுண்டு விரைந்தவனா பிடித்ததனில் படைப்பதுண்டு கரிந்துவிழநெருப்பிட்டு மூட்டலுண்டு கண்கள்புகைந்தெழுப்புரட்டிக்கொளுத்தலுண்டு உரிந்துகடித்தெழுந்துகந்த வுமிநீருண்டு வலிவிதையறிவாயுணர்வையுண்டு நிருத்தமிடும்மயில்போன்ற வழகினளே நேரிழையே யிக்கதையை நிகழ்த்துவாயே. (சுருட்டு)

முரிப்பதுவும்பார்ப்பதுவும் முகர்வதுண்டு முன்வாயைத்திறக்காமலடக்கலுண்டு, விரிப்பதுவுந்தூங்குவதும்சேர்க்கலுண்டு மெய்வாட்சிக்கண்டுஜலங்குவிப்பதுண்டு, பிரிப்பதுவுங்கட்டுவதுங் கொள்வதுண்டு பித்தமுற்றுப்

பொட்டணிந்துச் சுழல்வதுண்டு, பருத்தமுலையாணங்கே பருவமானேபக் குதமாயிக்கதையைப் பகருவாயே. (புகையிலை)

தாயிற்சிறப்புடன் சனித்துநிற்காள் தட்டாமல்பலரளிக்குங்கொத்துங்கொள்வாள், ஓயாமலமேல்கீழாய் நின்றுச்தேய்வாள்உள்ளதெல்லாந்தானுருட்டிக் கழுவிச்சேர்வாள், வாயாடும்பெண்கள்கையின் வலுவைப்பார்ப்பாள் வனிதையல்லப்புருடனல்ல மற்றோரல்ல, வாயாரவிக்கதையின் விபரஞ்சொன்னால் வஞ்சியேயுன்னடியை வணங்குவேனே. (அம்மி)

குலுக்குண்டுசிரிப்புண்டு குதிப்புமுண்டு கொத்துமணிமுத்துவடங்கொள்வதுண்டு, அலுப்புண்டு வளைப்புண்டு வாட்டமுண்டு அரையில்கலையொட்டியாண மணிவதுண்டு, கறுக்குண்டு மினுக்குண்டு தரிப்புமுண்டு தாசியல்ல வேசியுங்கூத்தாடியல்ல, விலைக்குகிகர்விழிமடணக்கே வஞ்சிமானேவன்மையாயிக்கதையை வழுத்துவாயே. (பதுமை)

குடுவையைப்போல்வாயுமிரு கண்ணுமுண்டு கூரன்கிந்தவாலுடன் கூண்டடைவதுண்டு, சுவையுறுமன்னமதைக் கொள்வதுண்டு நலஞ்சூழுநங்கையர்கைக் குளமாவதுண்டு, பங்கைகொள் யிறப்படுப்பிற் செல்வதுண்டு பாகமொடுசெய்ததெல்லாம் படைப்பதுண்டு, வடிவமதுமிகவுருவாய் உதித்தமானே மாங்குயிலே யிக்கதையை மதித்திடாயே. (அகப்பை)

விதைவிதைக்கப்பாத்திஜல மிறைப்பதுண்டு வித்துவேர்தழையில்லாக்காய்ப்பதுண்டு சூரைக்காமற்புவிபடிந்தே யெடுப்பதுண்டு குற்றமொன்றுங்கொள்ளாமற் கூய்ப்பதுண்டு உரைத்ததனைத்தானெடுத்துஞ் சமைப்பதுண்டு உள்ளபடிச்சுவைக்குமற்றெவ்வகைக்குமுண்டு களாபுரளக்காமகீர் பெருகுமானே கண்மணியே யிக்கதையைக் கழறுவாயே. (உப்பு)

கூண்டிலேயிருக்குமது பட்சியல்ல கொழுந்தோடிப்போகுமது மினாரின்னாது, காட்டிலேவிட்டுவிட்டால் பறந்தேபோகும் கனத்தமன்னர்வாசலிலேகாவலாகும், வீட்டிகத்திபிடித்தவர்க்கு எதிரேநிற்கும் இரவிலேதுணையாகுங்காலேயில்லை, காட்டிலேயிக்கதையை சொல்வாயாகில் நமக்கவைகுருவென்றே நம்பலாமே. (அம்பு)

காதுமாதவிக்கோவைக் கனிப்பழம் தண்டில்லாதவோர் தாமரைப்பூச்சடைச்சிவில்லாதவோர்பொய்கைகரையின்மேல் ஆளில்லாத சென்டன்றாங்கன்போனதும் காலில்லாதவன் ஓடிநடித்ததும் கையில்லாதவன்கட்டியணைத்ததும் வாயில்லாதவன் தின்றக்கனிப்பழம் கண்ணில்லாதவன் கண்டுமொழிந்ததே. (சொக்கட்டான்)

ஆதிகாலையில் அப்பனைவிட்டவள் அறிவுள்ளோர்கள் கையில் அடுத்தவள் வேதனையாகவேமேனிகிழித்தவள் வெட்டுகள்குத்துகள் கட்டுப்பட்டவள் எதுகாணிவள் மஞ்சள்குளிக்கிறாள் எத்தனையிட்டுத்தன் மேனிமினுக்கி

றான் ஒதுகாணிவள் தாசியுமல்லவே உரைத்தவர்க்காயிரம் பொன்னுந்தருவனே. (பனையோலை)

கங்கைநதிபுனல்மூழ்கிக் கரையிலேறி கதிரவனைக்கண்டுடலங்காய்ந்து வெற்றி பொங்குசுடல்சினியுண்டுரிஷபமேறி பூலோகம் காக்கவரும்சிவனுமல்ல இக்கிதனை அறிந்துசொல்லும் பெரியோர்தம்மை எப்போதும்குருவென்றேவணங்குவேனே. (சருவாடு)

முன்னாலேயறுப்புண்டு கட்டிமுண்டுமுனைகுலைந்து பெண்களெல்லாஞ் சீச்சியென்ன பின்னாலேகிழியுண்டு தையனல்லாள் பிடித்திருப்பார் கைக்குள்ளான்சுத்தக்காரி சொன்னாலும்பேர்கொஞ்சம் வேலைக்காரி சொகுசான விக்கதையைச்சொல்லுவீரோ. (துடப்பக்கட்டை)

பிஞ்சுண்டுபூவாது கசக்குங்காயும் பின்னலெனவேயிருக்குங் கொடிகளெல்லாந் துஞ்சிடவேசீரில்விழச் சுருட்டிக்கொள்ளும் சூரியனைக்கண்டாக்கால் மலர்ந்திருக்கும் பஞ்சவருமவருறவு மாலுக்காகார் பாருலகிலிக்கதையைப்பகருவீரோ. (வலை)

பட்டத்துத்தேவியவள் சொகுசுக்காரி பரிகாரியிளங்கொடியாள் பாரின்மீது கட்டுதற்கு மணைப்பதற்குங் கிள்ளுதற்குங் கட்டழகிபொறுத்திருப்பாள் கசுக்கென்றால் இட்டமுடனேவருவாள் தாசியல்ல யேந்திழையை யின்னவளென்றியம்புவீரோ. (வெத்திலை)

விநோதவிடிகதை - முற்றிற்று.